1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய மாவட்டத்தைவிட்டு சேலம் மாவட்டத்திற்கு விரைந்து இருக்கிறார். சேலம் மாவட்டத்தினுடைய குறிப்புகள் இங்கே இருக்கின்றன. அந்தமாதிரியான நிலைமைகளைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். 30 ஆயிரம் தடுப்பு ஊசிகள் போட்டு இருக்கிறோம். அது மட்டுமல்ல, காலரா நோய் என்று உடனடியாகக் கருதிவிடக் கூடாது. புதிதாக அறுவடை செய்த உணவு தானியங்களை முழுமையாக வேகவைக்காமல் அல்லது சரியாக வேகவைக்காமல் சாப்பிட்டதுதான் காரணம் Acute Gastero Enteritis அதனால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. காலரா நோய் என்று இரண்டு நோயாளிகளைக் கொண்டுவந்தார்கள். ஒருவர் இறந்து விட்டார், இன்னும் ஒருவர் நன்றாக இருக்கிறார்.

திரு. இரா. தாமரைக்கனி: கிழக்கே போகும் இரயில் என்ற சினிமா படத்தைப் பார்த்துவிட்டுத்தான் மக்கள் இந்த மாதிரி நடக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்களாக இருப்பதால் அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நிதி ஏதாவது கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கிழக்கே போகும் இரயிலோ, மேற்கே போகும் இரயிலோ அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். சுகாதார விஷயங்களை எப்படிக் கவனிக்கவேண்டுமென்பதற்காக டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் மூலமாக மாவட்டங்களில் எல்லாம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், தடுப்பு ஊசிகள் போடச் சொல்லப்பட வேண்டுமென்றும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் எந்தவிதமான இன்ஸ்பெக்ஷனும் இல்லாமல் சரியான வகையில் கொடுக்கப்பட வேண்டுமென்று எல்லா மாவட்ட ஹெல்த் ஆபீசர்கள் மூலமாகவும் ஆணை செக்ரடேரியட் மூலமாகப் பிறப்பிக்கப்பட்டு அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பிரச்சினை ஒன்றும் இல்லை.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) சட்ட முன்வடிவுக்கான விளக்கங்கள் தமிழில் அளிக்க வேண்டுதல்.

திரு. என். சங்கரய்யா: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இப்போது இங்கே எடுத்துக்கொள்ளப்படக்கூடிய கிராம அலுவலர் நீக்கம் பற்றிய சட்டமுன்வடிவுக்கான அரசு சார்பாக விளக்கங்கள்

ஆங்கிலத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழிலே கொடுக்கப் படவில்லை. சமீபத்திலேகூட விவாதித்தோம். சட்டமன்ற நடவடிக்கைகள் தமிழிலே நடைபெற வேண்டும் என்று. ஆகவே, அரசினுடைய இந்தத் திருத்தங்களை ஆங்கிலத்திலே எழுதிக்கொடுத்து, தமிழ்மொழி பெயர்ப்பு இல்லாமல் கொடுத்தால் அது எவ்வாறு சரியாக இருக்கும்?

[முற்பகல் 11–20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழிலே ரோனியோ செய்து கொண்டிருக்கிறார்கள்; உறுப்பினர்கள் பேசுவதற்குள் கிடைத்துவிடும்.

திரு. என். சங்கரய்யா: முதலிலேயே தமிழிலே கொண்டு வருவதா அல்லது ஆங்கிலத்திலே கொண்டு வந்துவிட்டு தமிழிலே மொழி பெயர்ப்பதா?

7. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, "இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை (முதலாவது அறிக்கை)" அளிக்கிறேன்.

8. அரசினர் சட்ட முன்வடிவு.

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண், 11/1981.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் அ. ரகுமான்கான், கு. பா. பழனியப்பன், துரைமுருகன், இரா. கருப்பையா ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

திரு. கு. பா. பழனியப்பன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: